உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 17 ‖ பராபவஞூ கார்த்திகைத் திங்கள் 1ம்உ [16–11–66] ‖ இதழ் 11

வையகம் துயர்தீர்க

நமக்குக் கிடைத்திருக்கும் சேமவைப்புக்களில் தலையாய தும், நிலையாயதும் ஆனது திருமுறையாகும். உற்ற நோய் நோன்றும் உயிர்க்கு உறுகண் செய்யாதும் வாழ்ந்த அருளா ளர்களின் அரிய திருவாக்குகளே பன்னிரு திருமுறைகளாகும்.

திருமுறை என்பது திருவினை அடையும் முறையைக் கூறுவதாகும். 'திரு' என்பது செல்வம், இலக்குமி, பெருமை, கண்டாரால் விரும்பப்படும் தன்மை, நோக்கம் எனப் பல பொருள்படும். எனினும் இங்குத் திரு, என்பது அவற்றையெல் லாம் குறிப்பது அல்ல. பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திரு முறையாகிய திருவாசகத்தில் 'சிவமே பெறும் திரு எய்திற்றி லேன்' என்று ஒரு அழகான தொடர் காணப்படுகிறது. மாணிக்கவாசகர், கல்வி, செல்வம், பதவி இவற்றையெல்லாம் துச்சமாகக் கருதிய பெரியவர். அவர் ஒரு திருவினை விரும்பு

கின்றார். அது எதுவாக இருக்க முடியும்? சிவத்தைப் பெறுதலே தமக்குரிய திருவாக, செல்வமாகக் கருதினர் என்பது இத் தொடரால் விளங்குகின்றது. எனவே திருமுறை என்பது சிவ மாகிய திருவைப் பெறும் முறையைக் கூறுவதாகும்.

இத்திருமுறைகள் பன்னிரண்டாக வகுக்கப்பட்டிருப்பினும் இவையனைத்தும் ஒரே நோக்கத்தோடு ஒன்றையே வற்புறுத்த எழுந்தனவாகும். மனித சமுதாயத்தில் வாழ வேண்டும் என நினைப்போர் பலர். 'வாழ்ந்ததெல்லாம் போதும்; இனி நமக்கு நற்கதி கிடைத்தால் போதும்' என நினைப்போர் சிலர். இவ்விரு திறத்தார்க்கும் ஒருங்கு பயன் தருவது திருமுறையாகும்.

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை' – என்பது

ஞானசம்பந்தரது திருவாக்காகும். 'மண்ணில் வாழவேண்டுமா? வாழலாம்; அதுவும் நல்ல வண்ணம் வாழலாம்; வாருங்கள்; எண்ணில் நல்ல கதி வேண்டுமா? வாருங்கள், அதனையும் பெறலாம்' என இருதிறத்தாரையும் அறைகூவி ஆட்கொள்ளு கின்றார் ஞானசம்பந்தர்.

மண்ணில் வாழ வேண்டியவர்களுக்கும், மேற்கதி பெற வேண்டியவர்களுக்கும் திருமுறை தரும் உபாயம் ஒன்று தான். அது எது? இறைவனுடைய திருநாமத்தை இடையறாது எண்ணி மகிழ்வதேயாகும். ஒவ்வொரு தலத்திலும் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு ஒவ்வொரு திருநாமம் உள்ளது. திருச்சியில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குத் தாயுமானவர் என்றும், திருப்பனந்தாளில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குச் செஞ்சடை வேதியன் என்றும், காசியில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு விசுவநாதர் என்றும் திருநாமங்கள் கூறப்படுகின்றன. இவற்றுள் எத்திருநாமத்தை எண்ணுவது என்ற ஐயம் எழ லாம். இறைவனோ ஒருநாமம், ஒருருவம் இல்லாதவன். அப் பெருமானுக்கு இங்ஙனம் ஆயிரம் திருநாமங்கள் இருப்பின் அவற்றுள் எதனை எண்ணி வழிபடுவது? இதற்கும் திருமுறை விடையளிக்கின்றது. இறைவனுடைய திருவுருவங்களை ஒவ் வொரு தலத்திலும் எழுந்தருளிவித்து வழிபடினும் அவ்விறைவன் ஒருவனே ஆவன். அதைப் போன்றே அப்பெருமானுக்கு அவ்

வவ்விடங்களில் கூறப்படும் திருநாமங்கள் பலவாயினும் அவனுடைய திருநாமம் ஒன்றேயாகும். அத் திருநாமம் எது? அதுவே திருஐந்தெழுத்து ஆகும்.

'திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில்'
'எண்ணிலேன் உன் திருநாமத்து எழுத்தைந்தும்'
'நாதன் நாமம் நமச்சிவாயவே' —

எனவரும் திருவாக்குகள் இறைவனுடைய திருநாமம் திருவைந்தெழுத்தே என்பதை நன்கு உணர்த்துவனவாகும்.

இத்திருவைந்தெழுத்தை இடையறாது ஓதி உய்யவேண்டுமென்பதே பன்னிருதிருமுறைகளும் ஒருங்குணர்த்தும் பெருநெறியாகும். சுந்தரர் பெருமான் தன் அடியார்களுடன் பேசுகின்ற பொழுதெல்லாம் சிவாயநம என்றே பேசுவர் என்று பெரிய புராணம் குறிப்பிடுகின்றது.

'குருகாவூர் அமர்ந்தருளும் குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் தோழர்திருத் தொண்டருடன்
வருவார்அப் பந்தரிடைப் புகுந்துதிரு மறையவர்பால்
பெருகார்வம் செலஇருந்தார் 'சிவாயநம' எனப்பேசி'.

சங்கிலியார் இறைவனுக்கு ஒரே சமயத்தில் இருமாலைகள் கட்டிப்புனைந்தனராம். ஒன்று உள்ளத்தால் ஐந்தெழுத்தாகிய மலரையும், பிறிதொன்று கையினால் நறுநாற்றமிக்க மலரையும் தொடுத்தார், என்று கூறப்படுகின்றது. இதனை,

'அன்புநாரா அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அலர் தொடுத்தே'

எனவரும் திருவாக்கால் அறியலாம். 'திருஞானசம்பந்தர் காலையில் எழும்பொழுதே திருவைந்தெழுத்து ஓதியெழுவதையும், சிவிகையில் ஏறும்பொழுதும் திருவைந்தெழுத்து ஓதியே ஏறுவதையும் கடப்பாடாகக்கொண்டவர்', என்பதைப் பெரியபுராணத்தால் நாம் அறிய முடிகின்றது.

'மாலையாமம் புலர்வுறும் வைகறை
வேலை செய்வினை முற்றிவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்து
ஏல அஞ்செழுத் தோதி எழுந்தனர்'

'சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்று

ஆதி யார்அரு ளாதலின் அஞ்செழுத்(து)
ஓதி ஏறினர் உய்ய உலகெலாம்'

எனவரும் திருவாக்குகளைக்காண்க.

இங்ஙனம் அருளாளர்களால் இடையறுது ஓதப்பட்ட திருவைந்தெழுத்தை மனித இனம் மட்டும் ஓதினல் போதாது; ஏனைய பறவையினங்கள் முதலியனவும் ஓதி உய்யவேண்டும் என்பது ஞானசம்பந்தர் கருத்தாகும். ஆதலால் ஒருநாள் தன் கண்ணில் கிளியொன்றுபட அதனைக் குழைவாக அழைத்து விழைவாக இத்திருவைந்தெழுத்தை ஓதக்கூறுகின்ருர்.

"சிறையாரும் மடக்கிளியே! இங்கே வா. நீ நாளும் தேடி அலைந்து காயையும் கனியையும் உண்டு வருகின்ருய். இன்று நான் தேனும், பாலும் மாறி மாறி முறையாகத் தருகின்றேன். நீ நன்ருக உண்டு எனக்கு ஒரே ஒரு சொல்லை மட்டும் சொல்லிப் போகவேண்டும். அச்சொல்லும் பயனற்ற சொல்லல்ல. உலகியலில் இருப்பாருடைய ஒருவரது பெயரும் அல்ல. உனக்கும், எனக்கும் எல்லா உயிரினங்களுக்கும் தலைவனுக இருக்கின்ற இறைவனுடைய திருநாமத்தையே கூறவிரும்புகின்றேன். அத்திருநாமம் மிக நீண்டது அன்று. ஐந்தே ஐந்தெழுத்தால் ஆகியது. அதுவே சிவாயநம என்பது. நான் உனக்குத் தேனும், பாலும் பலமுறை கொடுத்தேன். ஆனல் நீ எனக்குச் சொல்ல வேண்டிய "திருநாமமோ ஒரே ஒருமுறையாகும். எங்கே அத்திருநாமத்தைச்சொல்லு" என அக்கிளியினிடத்தில் குழைந்தும், இழைந்தும், விழைந்தும் வேண்டுகின்ருர், ஞானசம்பந்தப் பெருமான். அப்பாடல் பின்வருமாறு:—

'சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனெடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடல் தோணி புரத்தீசன் துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே!'

தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கவந்த ஞானப் பிள்ளையாதலின் 'கிளியும் இத்திருவைந்தெழுத்தை ஓதி உய்ய வேண்டும்' என்று விரும்பினுர் அவர். அத்திருவைந்தெழுத்தைக் களித்துக் கலந்ததோர் காதற்கசிவொடு ஓதி உய்வது நமது தலையாய கடமையாகும். எங்கும் அரன் நாமமே சூழ்க! வையகமும் துயர் தீர்க!

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்
உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 17. இதழ் 10-ன் தொடர்ச்சி)

உலகு குளிர வெமது மதியி லொழுகு மமுத கிரணமே
உருகு மடிய ரிதய நெகிழ வுணர்வி லெழு நலுதயமே
கலையு நிறையு மறிவு முதிர முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே
அலகில் புவன முடியும் வெளியி லளியு மொளியி னிலயமே
அறிவு ளறிவை யறியு மவரு மறிய பெரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியை யனைய மதலை வருக வருகவே
வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன் வருகவே.

எல்லா வுலகங்களும் குளிரும்படி எமது மெய்யறிவில் ஒழுகுகின்ற அமுத ஒளியே! உள்ளம் உருகுகின்ற நல்லடியார்களது மனம் நெகிழும்படி அவர்களது மெய்யுணர்வில் எழுகின்ற நல்ல தோற்றமே! கலைகளும், நிறைந்த அறிவும், முற்ற அதனால் முதிர்வடைகின்ற இனிய தேனே! கழுவப் பெற்ற மலத்தினர் முழுகுதற்குரிய பெரிய அருள் மிகுந்த கடலே! அளவில்லாத புவனங்கள் அனைத்தும் முடிகின்ற வெளியில் அருள் வடிவாயிருக்கின்ற ஒளிப் பிழம்பே! உயிர் அறிவில் இறை அறிவை அறிகின்ற மேலோரும் அறிதற்கரிய பெரும் பொருளே! இமய மலைக்கு மகளாகிய பார்வதி தேவியின் கண் மணியை ஒத்த குழந்தையே! வந்தருளுவாயாக! வந்தருளுவாயாக! வளமை தழுவுகின்ற! பருதி புரியில் எழுந்தருளியுள்ள குமரனே! வந்தருளுவாயாக! வந்தருளுவாயாக!

இழுமெ னருவி சொரியு மிமய
முதல்வி புதல்வன் வருகவே
இயலு நடையும் வடிவு மழகு
மெழுத வரியன் வருகவே

ஒழுகு கருணை முழுகு கமல
வதனன் வருக வருகவே
ஒருவ னிருவ ரொடுகை தொழுந
லுபய சரணன் வருகவே
விழுது விடுவெ ணிலவு பொழியு
நகையன் வருக வருகவே
விளரி பயிலு மளியு ஞமிறும்
விரவு குரவன் வருகவே
மழலை முதிர முதிரு மதுர
வசனன் வருக வருகவே
வளமை தழுவு பருதி புரியின்
மருவு குமரன் வருகவே

இழுமென்னும் ஓசையுடன் அருவி நீர் சொரிகின்ற இமய மலைக்கு முதல்வியாகிய பார்வதி தேவியின் புதல்வனே! வந்தருளுவாயாக! சாயலும், நடையும், வடிவமும், அழகும் எழுதுதற்கு அரியவனே! வந்தருளுவாயாக! ஒழுகுகின்ற கருணையிலே முழுகும் தாமரையை ஒத்த முகமுடையவனே! வந்தருளுவாயாக! வந்தருளுவாயாக! ஒப்பற்றவனாகிய உருத்திரன், திருமாலும், பிரமனுமாகிய இருவருடன் கைகூப்புகின்ற நல்ல இரண்டு திருவடிகளையுடையவனே! வந்தருளுவாயாக! இடையீடு படாது தொடர்ந்து வெள்ளிய நிலவொளியைப் பொழிகின்ற புன்முறுவலையுடையவனே! வந்தருளுவாயாக! வந்தருளுவாயாக! விளரி என்னும் பண்ணைப் பயிலுகின்ற அளியும், ஞிமிறுமாகிய வண்டுக் கூட்டங்கள் பொருந்திய குரா மாலையை உடையவனே! வந்தருளுவாயாக! மழலை நிறைய அதனால் முதிர்ந்த இனிய சொற்களை உடையவனே! வந்தருளுவாயாக! வந்தருளுவாயாக! வளமை தழுவுகின்ற பருதி புரியில் எழுந்தருளியுள்ள குமரனே! வந்தருளுவாயாக!

(தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 17, இதழ் 10-ன் தொடர்ச்சி

Definition of the True Path

மெய் நெறியின் இலக்கணம்

129. உறுமாறு அறிவதும் உள்நின்றசோதி
பெறுமாறு அறியில் பிணக்கொன்றும்இல்லை;
அறுமாறு அதுவான அங்கியுள் ஆங்கே
இறுமாறு; அறிகிலர் ஏழைகள் தாமே.

He is the light within thee;
To know how to reach Him
Is the True Path of Becoming;
An ye know thus;
Thou none contradiction knoweth;
That is the Path Finite, your goal's end;
They are folks but poor in spirit
That knoweth not merging in Light Divine.

உய்யும் நெறியை அடைவதென்பது, உள்ளேநின்ற சோதி வடிவாம் இறைவனை உணர்வது ஆகும். அவனை அவ்வாறு பெற அறிந்தால், பின்னே எவ்வித தடுமாற்றமும் இல்லாதாகும். இறைவனும் சோதியுட் கலந்து தானென்பது அற நிற்றலே, இறுதியான பேருகும். ஞானத் தெளிவில்லாதார் இதனை அறிகிலார்.

குறிப்பு வரி 3, *அறும் ஆறு - இறுதிநெறி*
இறும் ஆறு - ஆணவம் அழியும் படி.

The Worldly Path is not the True Path

உலகியல்வழி மெய்வழியாகாது

130. வழி நடக்கும் பரிசு ஒன்றுண்டு; வையம்
கழி நடக்குண்டவர் கற்பனை கேட்பர்;
சுழி நடக்கும் துயரமது நீக்கிப்
பழி நடப்பார்க்கு ப்பரவலுமாமே.

There is a True Path for the Journey;
They that follow the swamp of worldly paths
See but the mirage;
But they that avoid the sorrowful path of swirling Karma
Walketh not in sin
And sure shall worship at the Lord's Feet.

மெய் நெறியில் பயணம் செய்கின்ற முறை ஒன்றுண்டு: உலக வாழ்வில் விரைந்து செல்கின்றோர் சதுப்புக் களர் நிலத்தில் பயணம் செய்வோரே. அவர் கேட்பதெல்லாம் கற்பனையே. பிறவிச்சுழலிடும் துயரம் மிகுந்த அவ்வழியினை விடுத்து, பாவத்தினின்று விலகிச் செல்வார்க்கு இறைவனடியை அடைதலாகும்.

குறிப்பு வரி 2 *கழி - கடலையடுத்த சதுப்பு உவர்நிலம்.*
3 *சுழி - வினைச்சுழல், அல்லது, பிறவிச்சுழல்.*
4 *பழி நடப்பார்க்கு - பாவத்தைத்தாண்டிச்செல்வோருக்கு.*

(தொடரும்)

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–19 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 2–25 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	$7\frac{1}{2}$ ஷிலிங் அல்லது ரூ. 4–88 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

*காடுடைய சுடலை

சித்தாந்த செல்வர்: செந்தமிழ்ச் செம்மல்:
திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தன்,
அழகனகம், திருவண்ணாமலை.

"முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பல்" என்ப துலகு கண்ட வுயர்மொழி. இச்சாம்பல்தான் சுடலை; "காடுடைய சுடலைப் பொடி பூசியெ னுள்ளங் கவர் கள்வன்" என்பது திருஞான சம்பந்தர் தேவாரம். இடுகாட்டுச் சுடலையைப் பூசி இன்ப நட்டம் பயில்பவன் சிவனெனும் செம்மேனியம்மான். சிவன் சுடலை பூசிப், பித்தேற் யாடிய செயலைக் கண்டவுடன், படைக்குந் தொழிலிற் கண்ணுங் கருத்துள்ள வயன் றொந்து, பொருளுகித், தாமரை மலரைச் சார்ந்தான். திருமாலும் மனம் நொந்துப், பாம்பணைமேற் சென்று பள்ளி கொள்வாராயினர்; தன் கணவன் சுடலை பூசி யாடும் ஆட்டங் கண்டு உள்ளத்தே வருத்தங் கொண்ட வுமையம்மையும், தவம் புரியலானுள்; கண் கலங்கப் பார்த்த கசமுகனும், வருத்த மேலிட்டான், குளக்கரைக் கணித்துள்ள வரசமரத் தடியை நாடினுன்; மயிலேறும் பெருமாளாகிய முருகப் பெருமானும் மஞ்ஞைசையத் துறந்துப், பாலவடிவ மெடுத்துக் கோவணங் கட்டித் தன் தந்தையைப் போன்று வெண்ணீறு பூசி, பழநி மலையைச் சார்ந்து நின்றுன். சிவன் பூசிய சுடலையால் என்னவென்ன நிலைகளெல்லாந் தோன்றின வென்பதை யுன்னுங்கள்.

சுடலையின் பிறப்பிடந்தான் திருவெண்ணீறு. இவ்வெண்ணீறு சுடுகாட்டுச் சுடலை யினின்று முயர்வுடையதாக மாறி, பசுவின் சாணத்தினின்றும் பெறப்படு மொரு வுயரிய பொரு

* இஃததூஉம், தொண்டமண்டலாதீன கர்த்தரவர்களி னருளாணையின் வண்ணம், 31-3-66 அன்று, ஸ்ரீபெரும்பூதூரில், சிவன் கோவிலில், நிகழ்த்திய சொற்பொழிவி னெழுத்துப் பேருரை.

ளாயிற்று. இச்சாண வெண்ணீறு - அறிவியற்றுறை யாராய்ச்சி யாள ரெண்ணப்படி யுடலுக்கு நன்மை செய்வ தொன்றென்று காணப் பெற்றுள்ளது. சாணத்தில் கந்தக சத்தும், பிற விஞ் ஞான சத்துக்களும் நிரைந்துள்ளவதனுல், அதனுற் பெறும் வெண்ணீறு, வுடலுக்குத் தூய்மை செய்யும் பொருளாக வமைவ தோடன்றி யது வெழிலுடையதாகவும், நன்மையுடையதாகவும் உளது. நாகரிகம் வளர்ந்ததுள்ள தென்றெண்ணிய விக் காலத்து, வெண்ணீறெனின் வேண்டா வெறுப்பாக மாறியுள் ளது. எவ்வளவுதான் பகுத்தறிவு வளர்ந்த போழ்திலும், திரு வெண்ணீற்றின் தன்மை யாராயின், அணிந்து கொள்ள வேண்டுமென்ற வாவல் பிறக்கும். அது வெவ்வளவு வுயர்வு சான்ற தென்பதை யினி யாய்வோம்.

பாண்டிநாடு நின்ற சீர் நெடுமாறன தாட்சியில் அருகதம் கொழித் தோங்கி, சைவமாம் சமயம் தன்னிலையிற் குறைய வாரம்பித்தது. மன்னன் நெடுமாறன், சமணர்களுக்கு வேண் டியவளவு, துணை புரிந்து சமணம் பரவத் துணைசெய்தான். பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறை யாரும் மனம் பொருராகி வெதும்பினர். அதுகாலை சிவஞானக் களிரான திருஞானசம்பந்தர் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளினுர். அடிகளார் வருகை புரிகின்ருரென்ப துணர்ந்த, வமைச்சரும், தேவியும் சென்று வரவேற்றனர். அடிகளாரும் சிவமடத்திற் றங்கியிருந்தார். சமணர்கள் தூண்டுகோல் மேலிட, மன்ன னவர்கள்பாற் செவி சாய்த்து, ஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீக் கொளுவத் துணை செய்தான். அடிகளார் மனம் வருந்தி, மன்னனைச் சூலை நோய்ப் பற்றுமாறு அருளினுர். பாழ்த்த நெறி புகுந்த மன்னனும், குடற்று வலியால் பெரிதும் நொந்து, போக்குதற்கு வழியொன்று மில்லாருய் வருந்தி மெலிந்தான்.

மன்னனின் குடற்று நோய் உந்த வுந்த அவன் அரசசெய லில் நாட்டங் கொள்ளாருயினுன். இதுகண்ட தேவியும், அமைச் சரும், சமணர்களைக் கொண்டு, இத்திய நோய் போக்க முனைந் தனர். அவர்கள் எண்ணிலி மந்திர, தந்திரங்கள் கொண்டு, நோயைப் போக்க முனைந்தனர். எவ்வளவு முயன்றும், நற்பல

னெய்த முடியாமற் போயிற்று. முடிவில் அமைச்சர் குலச்சிறை யார் அறிவுறுத்தற்படி, ஞானசம்பந்தரும் இசைவு தெரிவித்து, மன்னன் மாளிகையை நோக்கிப் புறப்பட்டார். மன்னனிருப் பிடம் சென்றவுடன் அவ்விடம் முற்றிலும், சைவ மணம் கமழும் பான்மையதாயிற்று. அடிகளாரும் திருவெண்ணீற்றை யேந் தியவராய் மன்னனருகிற் சென்று, அணிவித்து "மந்திரமாவது நீறு" என்ற பதிகம் பாடுவாராயினர். உடனே மன்னனைப் பற்றிய வெப்பு நோய் அகலலாயிற்று. மன்னனும் தெளிந்து, உடற்பிணி நீங்கத் தெளிந்து நலம் பெற்றான். அன்றே சைவம் கொழித் தோங்கவும், சமணம் தலையெடுக்க வொட்டாமல் தடுப் பதற்குரிய நெறிகளிற் செல்லலானான். திருஞானசம்பந்தர் தந்தருளிய திருவெண்ணீற்றினாற்றான் நெடுமாறனுடைய குடற்று நோய் நீங்கலாயிற்று, அங்ஙனம் வெண்ணீறு தந்து பாடிய திருநீற்றுப் பதிகத்தை இவண் காண்பாம்.

திரு வெண்ணீறு மந்திரித்துத் தந்தால், பற்றிய வினை யெல்லாம் நீங்கும்; சிவலோகத்தில் அவனடியின்பம் துய்க்கின் றவர்களினும் மேலானது நீறு; மேனியிற் பூச அழகு பயப்பது நீறு; சிவப் பொலிவினையளிப்பது நீறு; வழிபாடு செய்வதற்கு உரியது நீறு; ஆகமங்களின் தோற்றத்திற்கெல்லாம் மூலமாக விளங்குவது நீறு; சமயத்தின் கண் மெத்த வேண்டும் பொரு ளாக அமைவது நீறு; பதி – பசு – பாசம் என்பவற்றில் பதியா னவர் பசுவின் பால் உள்ள பாசங்களை நீக்கும் சத்திக்கு உபா யப் பொருளாக விளங்குவது நீறு; திருவாலவாயானே திருநீறு.

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்திரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான்றிரு நீறே.

திருஞா — தேவா — திருவால — 1

வீட்டுப் பேற்றின்பத்தை யளிப்பது நீறு; முனிபுங் கவர்கள் அணிவது நீறு; வேதப் பொருளாக வமைவது நீறு: பத்திப் பேரின்பத்தை யூட்டுவது நீறு; இறைவனை வந்திக்கப் படுவது நீறு; வேண்டியதை வேண்டிய வாங்கு வீயும் சத்தி பெற்றது நீறு; திருவாலவாய்ப் பெருமானின் திருநீறு மெத்த பெருமை சான்றது.

முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே

திருஞா — தேவா — திருவால — 3

வலிமை மிக்க அடல் வெள்ளேறு (இடபம்) வாகனமாகக் கொண்ட திருவால வாயான் திரு நீற்றைப், போற்றிச், சீர் காழிப் பதியிற்றேன்றிய பூலோக தேவனுகிய ஞானசம்பந்தன் பாண்டிய மன்னன் குடற் பிணி, தீப்பிணி யாயதைத் தீரச் சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் தாமே!

ஆற்றலடல் விடை யேறு மாலவாயான் திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருஞா — தேவா — திருவால — 11

படையருத் திருக்கரம் பூண்ட திருநாவுக்கரசர், அமணர் களின் வலேயி லகப்பட்டுச் சிக்குண்டு கிடந்தகாலே, சைவம் தழைத் தோங்குதற்கு வடிகளார் பேரிடராயிருந்தா ரென்பதை யுணர்ந்த மன்னன் மகேந்திரன், அடிகளேப் பலவாறு அச் சுறுத்திப் பார்த்தான். எதற்கும் அலராமல், அஞ்சா நெஞ்சம் காட்டிய வடிகளாரை மன்னன் கற்றூணில் இறுகக் கட்டி, கடலிற் பாய்ச்சுமாறு ஆணையிட்டான். இதைக் கேள்வியுற்ற அரசனின் ஏவலாட்கள், அங்ஙனமே செய்தனர். அடிகளார் கடலில் கற்றூணுடன் பாய்ச்சப் பெற்ற போழ்து, தோணியென மிதந்து சென்று, கரையேற விட்ட குப்பத்தைச் சார்ந்தார். அவர் அவண் ஒதுக்கப் பெற்ற வுடன், அவ்விடம் விட்டுப் பெயர்ந்து பாடலிபுத்திரத்திலுள்ள சிவன் கோயிலேச் சார்ந்து, பெருமானுர் வழுத்தலானுர். தன் தவறை யெல்லாம் உணர்ந் தவர், எவ்வாற்ருனும் போக்கல் பெற்று நன்மைவழி யருளல் வேண்டும் என்று எம்பிரானே வழுத்துகின்ருர். அங்ஙனம் வழுத்தியகாலே, திருநீற்றின் பெருமை எத்தகைய தென்பதை மன்பதைவாழ் மக்கட்கு வுணர்த்துகின்ருர்.

''கருவாய் தாய்வயிற்றில் கிடந்தகாலத்தே, எம்மானே! நின் கழலை – திருவடிகளை – நினையுங் கருத்துடையேன்; உருவமாக வெளிப்பட்டு வந்ததினின்றும், உன்னுடைய நாமத்தைப் பயில லானேன்; உன் திருவருளினாலேயே என்னுடைய வாய் நின்னு டைய ஐந்தெழுத்தான பஞ்சாட்சர மந்திரத்தை (சிவாயநம) என்று ஓதிட திருவெண்ணீறு அணிந்தேன்; அதனால் சிவபரம் பொருளே! எனக்குத் தருவாயாக சிவகதி! திருப்பாதிரிப் புலி யூரானே!'' என்றார். அடிகளார் சமணத்தில் பெரிது கால முறைத் தவர்களாகையால், சமணத்திற் குரிய ''சிவகதி'' என்ற புண் ணிய வீட்டைப் பற்றிக் குறிக்கும் சொல்லே, தேவாரத்திலுமாளப் பெறுகிறது; அச்சொல் சங்க காலத்தில் சமணருக் குரிய வொன்று.

கருவாய்க் கிடந்துன்கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபாதிரிப் புலியூர் அரனே!

— திருநா – தேவா – திருப்பா – 6

தேவார வாசிரியர்களில், திருஞான சம்பந்தரும், திரு நாவுக்கரசரும், திருவெண்ணீற்றின்பால் கொண்ட வளவிற்குப் பற்று திருநம்பியாரூரர் கொள்ளவில்லை யென்றே தோற்று கின்றது. அரச மகவாகத் திகழ்ந்த ஆரூரர் சிவபெருமான் பால் அளவு கடந்து நேரியபற்று பூண்டிருப்பினும், வெண்ணீற் றைப் பற்றிய பெரிய நினைவுகள் அவருடைய தேவாரத்தில் காண முடிகின்றிலது. அவரது சமயபின் தோன்றலாகிய மாணிக்க வாசக அடிகளார் திருநீற்றின்பால் பெரும் பற்றுக் கொண்டிலங்கினார் என்பதவரின் திருவாசகப் பாக்கள் மூலம் நன்குணர்கின்றோம்.

ஈழ நாட்டைச் சார்ந்த புத்தர்கள் – தங்கள் மன்னனுடன் – அவன் பெற்ற மகளுடன் – தில்லையை நோக்கிப் புறப்பட்டு வந்தனர். வந்த அவர்கள் தில்லை வாழந்தணர்களை வாதுக் கழைத்தனர். இதைக் கேள்வியுற்ற அந்தணர்கள் நடு நடுங் கினர். அதுகாலை, மாணிக்கவாசகர் தில்லையிலுறைந்து வந் தார். அவ்வடிகளாரைப் புத்தர்களின்னெதிரில் கொணர்ந்து,

அவர்கள் கேட்கும் கடாக்களுக்குப் பதிலிறுக்க வேண்டினர். அடிகளாரும் அதற்கவரிசைந்தார். எனினும், புத்தர்கள் விதண்டாவாதமான கேள்விகளைக் கேட்கலாயினர். எவ்வளவு தானடிகளார் பதிலிறுத்த போழ்திலும், புத்தர்கள் அவைகளை யேற்கவில்லை. உடனே புத்தர்கள் தில்லைப் பெருமானருளா ளூமையாயினர். இதைக் கண்ணுற்ற மன்னன் தன்புத்த மகளை – ஊமையைப் – பேசுமாறு பணித்தல் வேண்டுமென்று வடிகளாரை வேண்ட, அதற்கிசைந் தடிகளாரும், அப் பெண்ணைப் பேசுமாறு செய்து, புத்தர்கள் கேட்ட கேள்விகட் கெல்லாம், அவளையே பதிலிறுக்கச் செய்தார். அங்ஙனம், அப்பெண் கூறிய பதில் தான், திருச்சாழலென, திருவாசகத் திலிடம் பெற்றுள்ளது. "மேனியழகிற்குப் பூசவதும் திரு வெண்ணீறு; பூண்கின்ற ஆரமாக விளங்குவதும் பாம்பு, பேசு வதும் திருவாயாலாகும்; அங்ஙனம் பேறு பெறுவதும் வேத மாகும்; பூசுகின்ற வெண்ணீற்றின் மூலம், உலகிற்றோன்றும், எப்பொருளும் நிலையாத் தன்மை பெற்ற தென்றும், பேசு வதனுல் அளவிலாற்றல் நிறைந்த ஞானத்தின் நிலையினையும், பூண்பதுவைக் கொண்டு, அளவு கடந்த பேருண்மை நிலை யினைக் கொண்டு விசனவ னெல்லாவுயிர்க்கு மிரங்குந் தன் மையனுஞன்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானுன் சாழலோ.

திருவா – திருச்சாழல் – 1

அடியார்கள், ஆற்றையு மலைகடலையும், மதகளிற்றையும், சுண்ணவெண்ணீற்றையும், நஞ்சையும், எதிர்த்தவர்கள். வம்புத் தனமான வாதிற்கு வந்தவர்களை, வழக் கொழுங்கால் வென்ற வர்கள். உலகிற்றோன்றி விளங்கு மெய் பொருட்களைக் கண் டு மஞ்சா நெஞ்சம் பூண்டவர்கள். படைத்த வொருவனைத் தவிர பிறவெவற்றையும் கண்டு மதியாதவர்கள். அப்படியிருந்தும், திருவாதவூரடிகளொரு கூட்டத்தைக் கண்டு மட்டிலஞ்சுகின் ஞர், அவர்கள்தான் திருவெண்ணீறணிகிலாதவர்கள், அம்ம!

இவர்களைக் கண்டு அஞ்சுகின்றேன், என்கின்றாரடிகளார் திருவாசகப் பாவில்.

'புற்றையே தன்னுடைய வில்லமாகக் கொண்டு வாழும், வாள் போன்ற கொடிய நச்சுப் பாம்பிற்கு அஞ்சேன்; பொய்யர்கள் தம் நடிப்பால் மெய் போலக் காட்டுகின்றவற்றிற்கும் அஞ்சேன்; கற்றைச் சடையுள்ள அண்ணலான கண்ணுதற் பெருமனுன சிவ பெருமானின் திருப்பாதங்களை எண்ணி, நண்ணி, மற்றும் தெய்வமுளதென்றெண்ணி யெம் பெம்மானுன பெருமானின் புகழைப் பரவத் தெரியாதவர்களைக் கண்டு அம்ம! நான் அஞ்சுகின்றேன்.'

"பிணியெல்லா மென்னைச் சார்ந்து வந்து வாட்டினு மதற்கு நானஞ்சேன்; உலகத்தில் தாய் வயிற்றில் பிறப்பதற்கும், பின்னரிறப்பதற்குங் கூட அஞ்சேன்; பிறை மதியை யணிந்துள்ளவனுன அங்கயற்கண்ணி யெம்மானினடியார்களோ டழுந்தி, அம்மா! இந்த விறுகியுள்ள பெரிய மாநிலம் பிளந்துங் கூட காண முடியாத பெருமானின் செம்மை பொருந்திய திருவடிகளைப் பரவித் திருவெண்ணீறணிகிலாதவரைக் கண்டால் அம்ம! நானஞ்சுகின்றேன்" என்றருள் கின்ருர் திருவாத வூரடிகளார்.

"புற்றில்வா ளரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடையெம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே!"

திருவா – அச்சப்பத்து – 1

"பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியினான்றன் தொழும்பரோ டழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணுச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே!"

திருவா – அச்சப்பத்து – 5

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Tiruttondattogai

திருத்தொண்டத்தொகை பண்: கொல்லிக்கௌவாணம்

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீலகண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. 11

I serve Saint Pusalar, a Brahmin from Tiruninra vur, Mangaiyarkkarasi, the Queen of Pandiya country, and Nesa Nayanar.

I am the slave of Kocchengan chozha Nayanar, who ruled over this world, and St. Tiruneelakanta yazhppanar.

I am from Tirunavalur and the son of St. Sadai yanar and Isaignaniyar, who reached the Holy Feet of Great Siva, my Master.

Those who read or listen to these poems, express ing my devotion to all these saints, shall be loved by my Lord at Tiruvarur.

(To be continued)

THE SAINT WHO LIT THE LAMP WITH WATER.

By

Professor E. S. Varadaraja Iyer.

Emapperur is a Saiva shrine in the realm of the Cholas, watered by the Cauvery alias Ponni. Lovely-looking with beautiful tanks with blossoming lotuses and habited by the holy Brahmans, well-versed in the Vedas, it waxed famous. The streets shone bright with festoons and the clouds which absorbed water from the sea, hovered round the lofty terraces of buildings. In the dark groves, the bees were humming round the areca-palms. One can hear the Vedic Chant in the little hours of the morning and the Sengalunir flowers or the Red-Water lily may be seen in the canals and water-ways. The lotus blossoms that stood erect in the midst of aurora paddy in the wet-fields, looked like the sacred fire lit on the sand, spread on the altar by Brahmans who performed their fire-oblations.

In that hamlet, there was one Naminandhi, a staunch Saiva devotee who could be likened to a fire because of his Vedic Practices and who believed that the sacred ash or Vibhuti was only one substantial thing in this world as that alone could wash away all sins and offer mukti or liberation. Ever bent upon worshipping God who chants the Sama hymns he spent his time happily.

One day he went to Tiruvarur to pay obeisance to the deity enshrined there. Approaching the ruby-like idol, he went into the Sanctum Sanctorum, reputed as the Araneri. Here he wanted to light lamps to God. As, however, the night-fall was imminent, he decided to stay at Tiruvarur itself and

went to a house nearby for getting some oil to light the lamps. It was unfortunately the abode of a Sramana, a jain householder. When the saint asked for oil, the house holder replied rather in a supercilious tone "Saint, your god holds fire in his hand and any external fire is therefore superfluous; there is no oil here; if you want you can use water to lit the lamps." The devotee who thought that the same Brahman was both truth as well as falsehood, could not brook the arrogant retort of the Sramana, went inside the temple and prostrated in front of the deity.

Now arose the following words in the air. "Dear Bhakta! do not worry; you may utilise the water in the adjoining tank for lighting lamps." The saint listened to the sacred words with joy and was at a fix as to what to do. Constantly thinking of the immense grace of the Lord and pronouncing his sacred names, he lighted the lamps with water, fetched from the tank, pouring the same on the wicks. The flame rose and the lamps burned. Having performed this holy task and having arranged for the burning of the lamps all through the night, he wended his way homewards and rested there for the night. He returned the following morning to Tiruvarur, performed all services enjoined by the scriptures and lighted the lamps as he did on the previous night. While he was performing the above duties, there arose a revolt among the Sramanas themselves. The noble Saint, not satisfied with the above services, arranged for the daily worship of the God with money and provisions liberally provided by the Chola Monarch.

It was then the time of the Panguni Uttiram Festivel at Arur; held annually in honour of Veethi Vidangar, the Local Deity. The Saint attended the

festival, found that there was a promiscuous gathering of all sorts of people and returned to his native village. But without getting inside the house, he preferred to sleep in the pial. His wife, who was a virtuous and charitable lady, requested him to get into the house, perform puja and take meals. But the Saint told her that he stood polluted by the multitude in the festival, which was made up of all people high and low, adding that he must purify himself first by a bath. His wife thereon went inside to fetch water.

Meanwhile we do not know whether it was the grace of God or whether the Saint himself was really exhausted, a short nap came upon him. Lo! a miracle, the presiding deity of Tiruvarur appeared before him in his dream and told him, that all beings that took shape in Kamalalayam were his own followers.

The Saint, on hearing these words felt sorry for having failed to offer worship to the Lord the previous night, told his wife what transpired and hurried to Tiruvarur. There he saw all beings assuming the shape of Nilakanta and was transported with joy when he worshipped them. Later on, he begged pardon of the Lord for his erroneous notion and continued to perform the services with greater fervour. Thirunavukkarasu Nayanar, who was a contemporary of the Saint and one of the four Saiva Samayachariars, dubbed him with the title of 'Tondarrukkani' the lynch-pin of devotees or the crest-jewel among them. The Saint finally had his perfect conscious bliss at the feet of Siva.

This is the story of Naminandhiadigal Nayanar as narrated by Sekkilar in his Magnum opus, the Periapuranam.

திருநீற்றின் மாண்பு

வித்துவான், முத்து. வே. கணபதி அவர்கள்,
முதன்மைத் தமிழாசிரியர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி, கோனூர்.

சிவ சின்னங்களில் முதன்மையாயுள்ளதும், மக்கட்குரிய ஞானசாதனமாம் ஐம்பெரும் சடங்குகளில் முதன்மை வகிப்பதும் பஞ்ச முத்திரைகளுள் முன்னிருப்பதும், மும்மல வாசனையை அடக்கி அகற்றும் அரும்பெறல் திறம் வாய்ந்ததும் அருமைத் திருநீறே யாம். திரு என்பதற்கு மேன்மை, அழகு, தெய்வீகம் என்ற பொருளையும் நீறு என்பதற்குப் பொடி என்ற பொருளையும் கொண்டால் மேன்மையும் அழகும் தெய்வீகமும் பொருந்திய பொடி எனக் கொள்ளின் சாலப் பொருத்தமாகும்.

ஆகவே ஆன்றோர் அதனை விபூதி என்ற சொல்லால் அழைத்தனர். வி - மேலான, பூதி - செல்வம். பிறவியைப் போக்க இதனினும் மேலாம் செல்வம் இல்லையாதலானும், பசுக்களுக்கு உண்டாம் மலத்தினைச் சுட்டு நீருக்கி மாதொரு பாகனே தந்திருமேனியில் பூசிக்கொண்டிருப்பதால் திருஞானசம்பந்த சுவாமிகள் திருநீற்றுப் பதிகத்தால் திருநீற்றை சிறப்பித்தார்.

மங்கையர்க்கரசியாரின் மணாளனாகிய பாண்டிய மன்னனின் கொடிய வெப்பு நோயைத் திருஞானசம்பந்தர் திருநீறு பூசிப் போக்கினார்.

மெய்ப்பொருள்நாயனார் திருநீற்றின் மாண்பினையுணர்ந்து போற்றிய பெருஞ் செயலாம் வரலாற்றை உணர்ந்து பின்னும் திருநீறு பூசாதிருத்தல் சைவராவார் அனைவர்க்கும் பேரிழுக் காம். இவ்விழுக்கினை நீக்கி நல்லொழுக்கினைக் கைக்கொண்ட கழறிற்றறிவார் பெருமான் அவ்வேடத்தை நினைவுறுத்திய வண்ணானுக்கும் வணக்கம் செலுத்தினாரென்றால் உண்மையும்,

அன்பும், முறையும் கொண்டு அணிவார்க்கு எவ்வித நன்மையுண்டு என்பதனைக் கூறவும் வேண்டுமோ. இதன் மாண்பினை,

"முத்தி தருவது நீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவது நீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்தி தருவது நீறு பரவவினியதுநீறு
சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே."

என்ற திருநீற்றுப்பதிகப் பாடலாலும்,

'யாதுபாதகம் புரிந்தன ராயினுமிகழும்
பாதகங்களிற் பஞ்சமா பாதகரெனினும்
பூதி போற்றிடிற் செல்வராயுலகெலாம் போற்றத்
தீது தீர்ந்தவர் பவித்திரராகியே திகழ்வார்'

எனக் கூறும், உபதேசகாண்டப் பாடலாலும் நமக்குப் பூசவும், பேசவும், பாடவும், பரவவும் இனியது திருநீறு என்றறியலாம்.

துதிசாலந்தக் கோமயத்தை யெடுத்துச் சிவன்சொல்பாகம நூல்
விதியாய் விளைத்தந் நீறள்ளி மிளிர்தன் திருநெற்றியிற்றரித்துக்
கதியார் பூதியிதுவே காப்பென்றுவிமலை கைக்கொடுத்தான்
மதியார் நுதலாடானணிந்தைந்தொழிலோ ரெவர்க்கும் வழங்கினளால்

என்னும் கடம்பவன புராணப்பாடலால் ஆதியும் அந்தமுமில்லா அரும்பொருளும் சோதி யெம்பெருமானே முதலில் பூதியைப் போற்றிப் பூசிப் புனிதையாம் விமலைக்கும் அவள் வழியாக ஐந்தொழிலோர்க்கும் அளிக்கப்பட்ட தென்றறிய வருகிறது. இறைவனின் (1) திருமுகத்தினின்று உண்டாகிய (2) பசுப் பெயர் (3) நிறம் (4) விபூதிப்பெயர் (5) பயன் என்பவை பின்வருமாறு:—

1	2	3	4	5
ஈசானம்	சுமனை	செம்மை	இரட்சை	மோட்சசாதனம்
தத்புருஷம்	சுசீலை	புகை	க்ஷாரம்	பிராயச்சித்தம்
அகோரம்	சுரபி	வெண்மை	பஸ்மம்	நைமித்திகம்
வாமதேவம்	பத்திரை	கருமை	பசிதம்	காமியம்
சத்யோசாதம்	நந்தை	கபிலை	விபூதி	நித்தியம்

இவற்றுள் வெண்ணீறொன்றே ஏற்றமுடையதாம். இது வரம்பிலாப் புண்ணியத்தை அளிக்கவல்லதாயிருப்பதனாலும் நீறு

புனைவார் வினையை நீறுக்குதலானும், வி—சிவன்; பூ—பாவனை; தி—அடைதல் எனப் பிரித்துக் காணின் விபூதி என்பது சிவனது பாவனையை அடைதலாம் எனவும் பொருள் படும்.

இது எல்லாப் பாவங்களையும் ஒழித்தலால் விபூதி என்றும், மாயாபாசம், ரோகத்தைச் சுட்டெரித்தலால் பஸ்மம் என்றும், சிவமாம் தன்மையைத் தோற்று வித்தலால் பசிதம் என்றும், மும்மல மாசு, பிறவிப்பிணி, எத்தீமையையும் நீறுக்குவதால் க்ஷாரம் என்றும், எவ்விதத்தீங்கும் வராமல் பாதுகாத்தலால் இரட்சை என்றும் பெயர் பெற்றது.

இதன் வகைகள் சிவாக்கிநி விபூதி, வைதிகாக்நிவிபூதி, சைவாக்நிவிபூதி எனும் மூன்றனுள், சிவாக்நி குருபற்பம், லகு பற்பம் என இரண்டாயும் அவற்றுள் லகுபற்பம் நிருபாதிக (இயற்கை) விபூதி, உபாதிக (செயற்கை) விபூதி யெனவும் இருவகைப்படும். வைதிகாக்நிவிபூதி சிரௌதம், ஸ்மார்த்தம், லௌகிகம் எனும் மூன்றனுள், சிரௌதம் புராதனி, சத்யோ சாதை என்ற இரு வகைப்படும். சைவாக்நி விபூதி, சைவம், அசைவம் என்ற இரண்டில், சைவம் கற்பம், அநுகற்பம், உப கற்பம் என மூவகைப்படும்.

இவ் விபூதியை விளைவிக்கக் குற்றமற்றதாய் ஈன்றணி மையும், முதுமையும் இல்லதாயுள்ள பசுவின் கோமயத்தைப் பங்குனி, மாதத்தில் வரும் அஷ்டமி சதுர்த்தி, அமாவாசை, பூரணை, கிரஹணமாகிய ஐந்து நாட்களில் ஏதாவதொன்றில் நித்திய கர்மானுஷ்டானத்திற்குப் பின் நிமலனைந் தெழுத் தோதி முருக்கு அல்லது தாமரையிலையில், கீழே விழுமுன் ஏற்று, மேல் பகுதியை நீக்கிப் பஞ்சவில்வம் கூட்டி (நொச்சி, விளா, கூவிளம், கிளுவை, மாவிளங்கம்) சத்தியோசாத மந்திர (பஞ்சப் பிரம்ம மந்திர) நினைவோடு உருண்டையாக்கிச் சிவாக் நியிலிட்டெடுப்பது கற்ப விபூதி. சித்திரை மாதத்தில் பசு மந்தை நின்ற இடத்தில் உலர்ந்திருக்கும் கோமயத்தைக் கொணர்ந்து கோசலம் விட்டுச் சடங்க மந்திர நினைவோடு விளைத்தல் அநு கற்ப விபூதி. கோமயத்தைப் பிரசாத மந்திரத்தால் விளைத்தல் உப கற்ப விபூதி யெனவும் கூறப்படும்,

பஞ்சப் பிரம முறைப் பாலாவின் கோமயத்தைக்
கஞ்ச விலையா லேற்றுக் கவ்வியத்தால்—எஞ்சா
திசையைப் பிசைந் தக்கிநியிலிட்டெடுத்தல்
நசையாருங் கற்பமெனு நாட்டு.

என்பது விபூதி விளக்கப்பாடல்.

இம் மூவகை விபூதியில் ஏற்ற ஒன்றை இயைந்த ஒன்றை த்ரி (மூன்று) புண்டரம் ஆக அணிய வேண்டும். திரிபுண்டரம் அதாவது மூன்று குறியாகக் குறுக்காக இடப்படுவதன் கருத்து என்னவென்றால்:- பதி, பசு, பாசம் எனும் முப்பொருளையும், உரு, அரு, அரு உரு மூவடிவையும், அகார, உகார, மகாரமாம் வியஷ்டிப் பிரணவத்தையும், பதி, அருள், ஆன்மா எனும் மூன்றெழுத்து மந்திரத்தையும், முக்குற்றம், மும்மலம், முக்குணம், மூவினை, முத்தத்துவம், மும்மூர்த்தி மூவகை வழிபாடு ஆகியவற்றைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

"மத்யமா நாமிகாங் குஷ்டைரநுலோம விலோமத:
அங்குஷ்டே நக்ருதாரே காத்ரிபுண்டரம் பஸ்மநாக்ருதம்
தத்த்ரிபுண்டரம் பவேச்சஸ்தம் மகாபாதக நாஸநம்."

என்பதற்கிணங்க மக்களாய்ப் பிறந்தோரனைவரும் மந்திரத் தோடாயினும், தந்திரத்தோடாயினும் த்ரிபுண்டரதாரணம் செய்தல் வேண்டும். ஏனெனில் மக்கட்குரிய ஸ்தூல, ஸூக்ஷ்ம அதி சூக்ஷ்ம, காரண, மகாகாரணமாகிய பஞ்ச ஸம்ஸ்காரங்களில் முதற்கண் உள்ளது திருநீறணிதலே யாம். ஏனைய நான்கான, அக்கமணி, பூனூல், சிவதீட்சை, சிவார்ச்சனை கிடைக்கும் காலமும், நியதியும் சூழ்நிலையும் கிடைக்கும் வரை மனமாசினை நீக்கி மாதொரு பாகனை வழிபடத் திருநீற்றினை உள்ளன்போடும் பயபக்தியோடும் அணிதல் வேண்டும்.

"ஓம் அஸ்திராயபட்" என்று, தான் பூசைசெய்யும் இடத்தில் பூசா பாத்திரத்திலுள்ள நீரைச் சிறிது தெளித்து வடக்கு முகமாக, முத்திவேண்டுவாரும், புத்திவேண்டுவார் கிழக்கு முகமாகவேனும் அமர்ந்து விபூதியை இடக்கையில் வைத்து நீர் தெளித்துச் சிறிது தென்மேற்கு மூலையில் முன் சொல்லிய மந்திரத்தால் தெளித்துப் பின் நீரிட்டுக் குழைத்து "ஓம் ஈசானய நம" என்று

சிரசிலும், "ஓம் தத்புருஷாய நம" என்று நெற்றியிலும், "ஓம் அகோராய நம" என்று மார்பிலும் "ஓம் வாமதேவாய நம" என்று நாபியிலும், "ஓம் சத்யோசாதாய நம" என்று இரு முழந் தாளிலும் இருபுயம், முழங்கை, மணிக்கட்டு, இருவிலா முதுகின் நடு, இரு தோள் இணையுமிடங்களிலும் இடவேண்டும். இவற்றை

"இடைமுனிரவி னெருங்குற நேரிடலு முறையாஞ்சிர நுதன்மார்
புடைசேருந்திக் கீசான முயர் தற்புருட மகோர மநு
நடைசேர் வாமம் புகன்றணிவர் நவில் சாதத்தின் முழந்தாடோள்
படுசீர் முழங்கை முன்கை களம் பரந்த வெரிந்வார் செவிக்கணிவார்."

எனப் பேரூர்ப் புராணம் கூறும்.

"நெற்றிக் கடைப் புருவ நீளமுரஞ் தோள்களினில்
உற்றவள வாறங்குலமோது — மற்றுமுள
தானமோரங் குலமாந் தானணிந்து வெண்ணீற்றை
ஞான முறு முத்தி நாடு"

எனக் கூறப்பெறுவதால் உத்தூளனத்திற்குப் பிறகு நெற்றி யில் கடைப் புருவமும், மார்பு, தோள் ஆகிய விடங்களில் 6 அங்குலமும் ஏனைய விடங்களில் ஓராங்குலமுமாகப் பதினோரி டங்களில் அணிதலே பரம பாவனையை நல்குவதாம் என அறிய லாம். ஆதலினால் திருநீறணிந்து "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது, வேதநான்கினு மெய்ப்பொருளாவது, நாதனாமம் நமச்சிவாயவே" என்றும், "சிவ சிவ என்கிலர் தீவினையாளர், சிவசிவ என்றிடத் தீவினைமாளும், சிவசிவ என்றிடத் தேவருமாவர், சிவசிவ என்றிடச் சிவகதி தானே," எனும் திருமந்திரப் பாடலையும் காலை மாலை யோதிக் காலனணுகாவழியைப் பின்பற்றி நீலமேனி வாலிழைபாகத் தண்ணல் தம் திருநீற்றினைப் போற்றிப் பரவிப் புனித முறுவோ மாக.

வாழ்க திருநீறு. வளர்கவே சைவமும்.

அழகின் இருப்பிடம்

திருமதி. அனந்தலக்ஷ்மி சுப்ரமணியம் அவர்கள், M.A., B.T.,
5, விநயகமுதலி தெரு, சென்னை-1.

இறைவன் மனிதனுக்கு அளித்த அரும் பெரும் சொத்து இயற்கை. இயற்கையின் கொள்ளை அழகைச் சுவைத்திடாத மனிதன் இல்லை. பஞ்சத்தின் கோலம் தலைவிரித்தாட, நாளை என்ன செய்வோம் என அலமந்து தடுமாறும் மனிதனின் நொந்த உள்ளத்திற்கு நன் மருந்து இவ்வெழில். எல்லையில்லாக் கவலைகளால் ஏமாறி தொல்லையிரும் பிறவியை வேரோடு அழித்துவிட விரும்பிச் சுற்றி திரியும் மனிதன், முல்லை மலர்கள் நகைக்கும் போது, குழந்தையைக் கண்ட தகப்பன் போல் தன்னை மறக்கிறான். வண்டுகள் ரீங்காரம் செய்ய, பறவைகள் இவனைக் கண்டு ஆர்ப்பரிக்கும் போது, உற்ற நண்பனைக் கண்டாற் போல் அளவளாவுகிறான். இப்படி இயற்கையில் இன்பம் காணும் மனிதன் தன்னலமற்றவன். தான் மகிழ்ந்த குழந்தைகளைத் தன் இனத்தார்க்குக் காட்டுகிறான். தன்னுடைய உற்ற நண்பரை மற்றவர்க்கு அறிமுகப்படுத்துகிறான். சிறந்த சொற்களால் உயர்ந்த இயற்கையைப் புகழ்ந்து, தன் பின்னோர் உள்ளத்தில் நீங்க இடம் பெறச் செய்து, நிலைபெரு உடலை நீக்கு முன், நிலைபெற்ற இயற்கையின் பெருமை வாழச் செய்கிறான். இயற்கையின் எல்லையில்லா எழில் இடம் பெற்று உயர்ந்த இலக்கியம் அழகின் இருப்பிடமாய் மாறினமை காரணம் இது தான்.

பண்டைப் பழம் தமிழர் இயற்கையைத் தன் முச்செனப் பண்பெனக் கொண்டு வாழ்ந்தார். இயற்கையோடு கொண்ட இன்ப உறவால் தான் ஐந்தறிவு படைத்த உயிரினத்தையும் கேட்குந போலவும் கிளக்குந போலவும் எண்ணி, உறவாடினர்.

இயற்கையின் பால் கொண்ட பேர்விருப்பால் தன் விருப்பைக் காட்ட கலையை ஒரு கருவியாய் கொண்டனர். இதற்குப் பழம் தமிழ் இலக்கியமே தக்க சான்று. அழகின் இருப்பிடமாய் விளங் கும் இலக்கியக் குவியலினின்று ஒரு சில அழகின் இன் துளி கண்டு மகிழ்வோம்.

என்றுமே மிகச் சிறந்த பொருளேயே விரும்புவது மனிதன் இயல்பல்லவா? அதிலும் "உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல்" என்பது தமிழனின் கோட்பாடாயிற்றே? ஒரு புலவன், காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான். அடர்ந்த காடு. பசும்புல் போர்த்த இடம். பசும்புல்மேல், மென்மையான பல வண்ண மலர்கள் பரந்து கிடக்கின்றன. அப்பொழுது இன்று கடன் காரரைத் துரத்திச் செல்லும் ஈட்டிக் காரன் போல், வண் டுகள் மலர் தோறும் சென்று கொண்டிருக்கின்றன. தேனீக் கள் தேனைச் சேர்த்து தன் தேன் கூட்டை அடைவதைக் காண் கிறுன் கவிஞன். அவன் மனம் சிறகடித்து பறக்கலாயிற்று. தான் கண்ட காட்சியையேக் கருவாக கொண்டு ஒரு அழகிய உலகம் படைத்து விட்டான். அவன் உலகத்தில் வாழும் வண்டு எந்த மரத்தில் இருந்த மலரினின்றும் தேன் எடுப்பதில்லை. மலர்களில் தனி சிறப்புடைய தாமரையிலிருந்து தான் தேனை உறிஞ்சும். அதுபோல், அவன் தேனீக்கள் கண்ட மரத்தில் தேன் கூட்டைக் கட்டுவதில்லை. உயர்ந்த மலையுச்சியில் நீண்டு இருந்து மணம் பரப்பும் சந்தன மரத்தில் தான் கட்டும். எழிலின் இருப்பிடத்தில் இருந்து எழில் மிகு பொருளை எடுத்து, எழிலிடத்தில் சேர்த்து வைக்கும் பொறுப்பை கவிஞன் ஏற்றுக் கொண்டான். இந்த அழகிய காட்சி, படிப்பவர் உள்ளத்தை விட்டு என்றும் மறையா உயர் காட்சி, நற்றிணையில் முதற் பாடலில் காணலாம்.

"தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன்" (பாடல் 1)

இவ்வாறு உயிரோடு உயிராக கற்பனையுடன் உறவாடியவன் அழகின் இருப்பிடமாய் தன் பாடலை மாற்றிவிட்டான்.

அன்பு எங்கெலாம் வாழ்கிறதோ அங்கு அழகுமிளிரும். அழகு பொங்கும் இடத்தில் அன்பு முகிழ்க்கும். நம் பைந்

தமிழர் காமனைக் காதலுக்கோர் உறைவிடமாகவும், அழகிற் கோர் இருப்பிடமாகவும், காதல் மன்னனும் அழகின் கொள்கல மாய் நினைத்து தொழுவதே இதன் பொருட்டுத்தான். எப்போதும் இணைந்து நிற்கும் உயிர்களிடத்தில் அழகுமிளிரும். ஒன்று மற்றதன் பொருட்டு தன்னை அர்ப்பணிக்க முனையும் போது பன் மடங்காய் அழகு ஒளிரும். இத்தகு அழகு காட்சி தமிழ் உலகில் எத்தனை? எத்தனை??

சுனையில் சிறிது நீரே இருந்தது. அதைக் குடிக்கச் சென்றன இரண்டு விலங்குகள். ஆணும் பெண்ணுமாய் சென்ற இரண்டு மான்களுக்குப் போதிய நீர் இல்லை. உடனே, ஆண் மான் இதனை உணர்ந்து பெண்மானைக் குடிக்கத் தூண்டுகிறது. பெண்மான் இதே எண்ணத்துடன் ஒதுங்கிவிட்டது. தான் இல்லாமல் பெண்மான் குடிக்காது என்பதறிந்து, ஆண்மான் குடிக்கச் சென்றது. பெண்மானும் தொடர்ந்தது. இரண்டும் வாயை நீரில் வைத்தன. ஆனால் ஆண்மான் குடிப்பது போல் நடித்து நீரை உள்ளுக்கு இழுப்பது போல் பருகாமல் மூச்சை விட்டுக் கொண்டிருந்தது. பெண் என்றும் பேதை யல்லவா? பெண்மான், ஆண்மான் குடிப்பதாக எண்ணித் தான் குடித்து விட்டது. ஆண்மானின் பெருவிருப்பம் நிறைவேறியது. இவ் வொப்பற்ற அழகியதோர் காட்சியை நாம் ஐந்திணை ஐம்பதில் கண்டுமகிழலாம்.

"சுனையிற் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி" (பாடல் 38)

இத்தகு உயர்ந்ததோர் சங்கப்பாடல்களைக் கொண்டு, சங்கத் தமிழர் இயற்கையின் பால் எல்லையற்ற ஈடுபாடு கொண் டார்கள். ஆகையால் தான் அவர்கள் பாடல்கள் இயற்கையின் எழிலுருவமாய் விளங்குகின்றன என்றெண்ண வேண்டா. பல காலம்கழித்துத்தோன்றிய கம்பனின் பாடல்களைத் திருப்புங்கள். அவன், அயோத்தியைக் காட்டும் பெருமையைச் சிந்தியுங்கள். மருதத்தின் எழிலோவியம் காட்டும் போது அழகுத் தலைவி

களிநடனம் புரிகிருள். அழகு வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. ஏன், பாவத்திற்கே இருப்பிடமான மன்னனுல் ஆளப்படும் இலங்கையை எழிலின் எழிற்கோயிலாய் மாற்றிவிடுகிருன். பாவத்தின் இருப்பிடமாம் இலங்கையில் எப்படி இரவு அமைந்தது என்று கூறுகிருன் கேளுங்கள் ;

மாலைக் காலம் வெண்மையான மல்லிகை யரும்புகள் மலர்கின்றன. அவை கட்டவிழ்க்கும் தருணத்தில், கடைதிறந்ததும் வாங்க விரும்பும் வாடிக்கைகாரர்போல், காத்து நின்ற வண்டுக் கூட்டம் மொய்க்கின்றன. அதைப் பார்த்த கவிஞனுக்கு, வேருென்ருேடு ஒப்புமை படுத்த ஆசை எழுகிறது. அவனுக்கு அந்த காட்சி, இரவில் படர்ந்த இருளின் துண்டுகளும், அவ் விருளைப்பறக்க அடிக்கும் வெண்ணிலவின் துண்டுகளும் தம்மில் பகை கொண்டு கவ்வுவது போல் இருக்கிறது. எப்படி இருக்கிறது இக்காட்சி! கவிஞன் வாய்ச்சொல்லாலே இனி நாம் கேட்போம் ;

"எல்லியி னிமிரிருட் குறையு மவ்விருள்
கல்லிய நிலவின்வெண் முறியுங் கவ்வின
புல்லிய பகையெனப் பொருவ போன்றன
மல்லிகை மலர்தொறும் மலர்ந்த வண்டெல்லாம்"

(சுந்தரகாண்டம், ஊர்தேடு படலம்)

கம்பன் மட்டும் தான் கொள்ளை அழகில் உள்ளம் பறி கொடுத்தான் என நேயர் எண்ணவேண்டா? இயற்கையின் அழகிலே இறைவனைக் கண்ட பக்தர்களும் நம்மிடையே வாழ்ந்தனர். சைவக்குலக் கொழுந்தாய் வாழ்ந்த அப்பர், 'வீசு தென்றலிலும் வீங்கிள வேனிலும், முசுவண்டறை பொய்கையிலும்' இறைவனைக் கண்டு மகிழவில்லையா? தம்பிரான் தோழனும், அன்புடை மணிவாசகரும், ஆளுடைப்பிள்ளையும் இறைவனின் அங்க அசைவுகளை இயற்கையில் கண்டு மகிழவில்லையா? ஏன், இன்று நம் உள்ளத்தில் நீங்கா இடம்பெற்று நம்மோடு வாழ்ந்த பாரதியார், காக்கை சிறகினிலும், இலையின் பசுமையிலும், தீயின் வெம்மையிலும் நீரின் தண்மையிலும் இறைவனை அனுபவித்து மெய்சிலிர்க்க வாழவில்லையா?

ஆகவே! அன்புடைய நேயர்களே!! இயற்கையின் எழிலார்ந்த இருப்பிடம் இலக்கிய உலகம். அதில் இயற்கையின் அழகில் மூழ்கித் திளைக்கலாம். எப்புறம் பார்த்து மகிழ்வது என்று அறியாமல் திகைக்கலாம். அருவியோடு கைகொட்டி ஆர்ப்பரிக்கலாம்: குயிலோடு கொஞ்சலாம். மயிலோடு ஆடலாம்; தாமரையோடு மலர்ந்து அல்லியோடு கூம்பலாம். இவ்வாறு ஒன்றி நிற்கும் பெரும் பேறு நமக்குத்தான் கிடைக்கும். அதுவும் இலக்கிய உலகத்தில்தான் கிடைக்கும். அதை அனுபவிப்பதன் மூலம் அணுவணுவாக ஒன்றுவதன் மூலம் இலக்கிய உலகத்தைப் படைத்தோனுக்கு நம்மை அறியாமல் தலைவணங்குகிறோம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

[ஏழாம் திருமுறை]

★ புதிய பதிப்பு ★

(விசுவாவசு ஆண்டு வைகாசிப் பூச வெளியீடு)

350 பக்கம் வெள்ளைத்தாள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு, அவரைப்பற்றிய கல்லெழுத்துக் குறிப்புக்கள் ஆகியவை, அடங்கியது, தனிப்பிரதி அடக்க விலை ரூ. 1-30.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோர்க்கு 20% கழிவு.

(தபால் செலவு வேறு)

கிடைக்கும் இடங்கள்:—

1. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம்.
(திருநெல்வேலி மாவட்டம்.)

2. திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள், B. A.,
தியாகராச விலாசம், 53, பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 17, இதழ் 10-ன் தொடர்ச்சி]

III

SUNDARAMURTI SWAMI

(Abbreviated as SUNDARAR)

74. அந்தணாள னுன் னடைக்கலம்புகுத
    வவனைக் காப்பது காரணமாக
வந்தகாலன் றனுருயிரதனை
    வவ்வினாய்க்குன்றன் வன்மைகண்டடியேன்
எந்தைநீயெனைநமன்றமர்நலியி
    லிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்
    செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

God should deliver His own from death. The appeal here is to the familiar story of Markandeya (see No. 3) Yama is the god of death who gathers in the souls of men.

74. The young saint refuge sought from Death;
    To save him, Thou grim Death did'st slay,
Such deeds Thy might accomplisheth,
    And I who have beheld them pray
"O Father, should dread Yama press
    On me, forbid him 'Tis my slave';
Do Thou in green Pungur confess,
    I've reached Thy foot, and Thou can'st save."

(To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

சூரிய பூசை

திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள்

ஞாயிற்றை வேதம் வாழ்த்துகிறது. சோதிடக் கலை அவனைத் தலைமையாகக் கூறுகிறது. சௌரசமயம், அவனை முழுமுதலாக வழிபடுகிறது. சூரிய சித்தாந்தம், அவனைத் தலைமையாகக் கொண்டு கணிக்கப்படுவது. சௌர மானம், என்பது அந்த அளவையின் பெயர். அவன் தோற்றமும், மறைவும் காவிய உறுப்புகள். அவனைப் பாடாத மொழி, புகழாத புலவர்கள், வணங்காத மக்கள் இல்லை. 'பலர் புகழ் ஞாயிறு' என்பது திருமுருகாற்றுப்படை வரி. 'ஞாயிறு போற்றுதும்' என்று சிலப்பதிகாரம் போற்றி செய்கிறது. சூரிய குலமே, இராமாயணத்தை அணி பெறச் செய்வது. வால்மீகி இராமாயணத்தில் 'ஆதித்திய இருதயம்' அவனைப் போற்றுகிறது. சிவன் கோவில்களில், முதலில் அவனை வழிபட்டே பகல் பூசை தொடங்குகின்றது. சிவமூர்த்திகளுக்கு அவன் வலக் கண், அவன் விளங்கும் அட்ட மூர்த்தங்களில் ஒன்று, ஞாயிறு. சிவன் கோயில்களில் சூரியன், ஒன்பது கோள்களில் ஒருவனாகவும், தனிமையாகவும், ஆக இரு இடங்களிலும் அவன் அமைக்கப் பெற்றிருக்கிறான். சிவன் கோயில்களின் அமைப்பில், சூழ்ந்த பரிவாரங்கள் மிகப் பிற்பட்ட காலத்தில் உள்ளே இடம் பெற்றன. பரிவாரங்களில் நவக்கிரகம் மிகப் பிற்பட்டது. இவை சில கோயில்களில் புறப்புறச் சுற்றில் இடம் பெற்றிருப்பதே இதன் நுழைவின் காலததை விளக்கும். சிவன் கோயில்களில் இவை சுமார்த்தப் பிராமணர்களால் சிறப்பாக வழிபடப்படுவது. பெருமாள் கோயில்களில் நவக்கிரகம் கிடையாது. புறநடையாக ஆழ்வார் அருளிச், செயல் பெற்று

'சித்தாந்தம்' ஆசிரியர் அனுமதி பெற்று இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

மதுரை—கூடல் அழகர் கோயிலில் கூட அண்மையில் இடம் பெற்று விட்டது. மெய்கண்ட சித்தாந்த சைவர்கள், சிவபெருமானை ஒப்ப, ஒன்பது கோள்களை வழிபடுவது, சித்தாந்தச் செந்நெறியை அறியாத நிலை ஆகும். இன்னும் திருக்கடவூர் முதலிய பல கோயில்களில் 'நவக்கிரகம்' கிடையாது. புள்ளிருக்கு வேளூர் உள்ளிட்ட பல கோயில்களில், இறைவன் முன், அவர்களின் ஆற்றல், வலிகுன்றி, அழிந்து நிற்கும் நிலையை உணர்த்த, பல கோணங்களில் உள்ள அவர்களை, ஒழுங்காக ஒரு வரிசையில் அணிவகுத்து அமைத்திருப்பதைக் காணலாம்.

சிவ பூசையில் சூரிய பூசைக்கு முதலிடம் உண்டு; ஆனால் நவக்கிரக பூசை கிடையாது. தனிப்பட்ட 'சூரியநமஸ்காரம்' என்பது ஒன்று உண்டு. சூரியனுக்குத் தனிப்பட்ட கோயில்களும் உண்டு. ஒரிசா மாநிலத் தலைநகர் புவனேச்சுரம் என்பது. அங்கிருந்து 41 கல் கடந்து சென்றால் கடற்கரையில் 'கொணரக்' என்ற ஊர் உள்ளது. இது பூரி செகந்நாதத்திற்கு 53 கல் தொலைவு ஆகும். அங்கு கி. பி. 1278—இல் கட்டிய தலைசிறந்த சூரியன் கோயில் கற்கோயிலாக இருப்பதைக் காணலாம். கூர்ஜா மாநிலத்தில் 'மேசேனு' மாவட்டத்தில் அகமதாபாத் நகருக்கு வட மேற்கில் 60 கல்லில் மொதீராவில் கி.பி 1027-இல் ஏற்பட்ட கிழக்கு நோக்கிய சூரியனார் கோயில் உண்டு. இதன் மூலக் கோயிலில் இருந்த, சூரியன் சிலை இன்று இல்லை. காஷ்மீர நாட்டில் 'மார்ட்டண்டி' லும் (9ஆம் நூற்றுண்டு), மத்திய மாநிலத்தில் 'கஜுரகோ' லும் (10—ஆம் நூற்றுண்டு) பரிதியாருக்குத் தனிக் கோயில்கள் உண்டு. பகல்வாயில் உச்சிக்கிழான் கோட்டம் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்ததை இளங்கோ அடிகள் கூறுகிறுர். ஆடுதுறையை அடுத்த சூரியனார் கோயில் முதற் குலோத்துங்கன் காலத்தில் ஏற்பட்டது.

ஞாயிற்றின் நேர்ஒளி குறிப்பிட்ட நாட்களில், மூல மூர்த்தியின் மேல் தோயும் படி தமிழ் நாட்டில் சில சிவன் கோயில்களைக் கட்டி இருக்கிறுர்கள். இது கோயில் அமைப்பின் சிறப்பு. கிழக்கு நோக்கிய கோயில்களில் காலையிலும், மேற்கு நோக்கிய கோயில்களில் மாலையிலும், சூரியன் நேராக வரும் காலங்களில் ஞாயிற்றின் ஒளி, மூலவர் மேல் வீழ்வதை இன்றும் காணலாம்.

அப்படி வீழும் நாட்கள், அக்கோயிலில் 'சூரிய பூசை' நாட்கள், என்று சிறப்பிக்கப்பட்டு, அந்த வேளையில் சிறப்பான பூசனைகள் நிகழ்கின்றன. அந்நாட்கள் சௌரமான கணக்குப் படி ஏற்பட்ட தேதிகளை ஒட்டி நிகழ்கிறது. மிகச் சில இடங்களில் சாந்திரமான–பிறைநாட்களை ஒட்டியும் நிகழ்வதாகத் தெரிகிறது. விஞ்ஞான முறையில் சூரியன், ஒளிதரும் நட்சத்திர (Star) வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளான். அந்த அடிப்படையில் சூரியன் கிரக (Planet) மாகக் கருதப்படவில்லை. ஏனைய கோள்கள் ஒளி தருவன அல்ல. அவை சூரியனிடமிருந்து ஒளியைப் பெறுவன. ராகுவும், கேதுவும், சந்திரனும் பூமியும் செல்லும் வீதி வழிகள் சந்திக்கும் புள்ளி இடங்களே தவிர, ஏனைய கிரகங்களைப் போல் அண்டப் பருப்பொருள்கள் அல்ல. பூமியும் ஒரு கோளே. சந்திரன், கோளைச் சுற்றும் துணைக்கோள் (Satilite)

மேலே குறிப்பட்ட கூர்ஜர மாநில மொதீராவில், இரவும் பகலும் சம கால நேரங்களாக வரும் மார்ச் 21, செப்டம்பர் 22 அல்லது 23–ல் (Springaud autumnal equinoxes) சூரியன் ஒளி நேரே மூலக் கோயிலில் விழுகின்றது. தமிழ் நாட்டில் அப்படி நிகழும் இடங்கள் மாத வாரியாக வருமாறு:

1. சித்திரை:
   - 1, 2, 3 கூடலை ஆற்றூர்
   - 1 முதல் 7 புறவார் பனங்காட்டூர்
   - 5, 6, 7 ஆடுதுறை
   - 7 முதல் 18 (12நாள்) செம்பொன்பள்ளி
   - 11, 12, 13 குடந்தைக் கீழ்க்கோட்டம்–நாகேசுரசாமி
2. புரட்டாசி:
   - 7, 8, 9 பைஞ்ஞீலி
   - 19, 20, 21 புள்ளிருக்கு வேளூர் (மாலை)
   - 19, 20 21 கடலூர் (மாலை)
3. ஐப்பசி:
   - 9 முதல் 15 (7நாள்) எத்தாப்பூர் சாம்பமூர்த்தி கோயில்
   - 14 ஆம் தேய்பிறை நாள் முதல் 7 நாள் நெல்லிக்கா (மாலை)

4. மாசி:

1–7 (7 நாள்) எத்தாப்பூர் சாம்பமூர்த்தி கோயில்
13, 14, 15 கண்டியூர் (மாலை)
17 முதல் 21 (5நாள்) குன்றத்தூர் சேக்கிழார்
18 முதல் 24 (7நாள்) நெல்லிக்கா (மாலை)
19, 20, 21 புள்ளிருக்கு வேளூர் (மாலை)
21 முதல் 25 (5நாள்) பூந்தமல்லி வைத்தியநாதர்
23, 24, 25 அழுந்தூர்

5. பங்குனி:

1 முதல் 7 மாயூரம்—வள்ளலார் கோயில் (மாலை)
7, 8, 9 பைஞ்ஞீலி
12, 13, 14 சித்தூர் மாவட்டம் நாகலாபுரம்
13 முதல் 22 (10 நாள்) தெளிச்சேரி (மாலை)
13, 14 15 வேதிகுடி, திருத்தணி ஆறுமுகசாமி
23 முதல் 27 (5 நாள்) நாவலூர்
25 முதல் 29 (5 நாள்) பொன்னூர் (மாயூர வட்டம் பொன்னூர்)

மேற்குறித்த தேதிகளில் சில வற்றிற்கு ஆதாரம் சிவத் தல மஞ்சரியும் பஞ்சாங்கங்களும் ஆம். இவைகளில் பல, நேரில் கண்டறிந்தவை. இன்னும் பல இருக்கக்கூடும். அவைகளை அறி முகப்படுத்த கோயிலார் முயல வேண்டும். அன்பர்கள் தெரியப் படுத்தினல் சேர்த்து வெளியிட முடியும். திருச்சி மாவட்டம் லால்குடி (தவத்துறை)யில் உண்டு. தேதி விடுபட்டு விட்டது. கன்னட நாட்டு எல்லையில் காவிரி தென்கரையில் கண்ணம் பாடிக்கு மேற்கே 19–வது கல்லில் உள்ள 'இடத்துறை' அர்க் கேசுரத்தில் ரதசப்தமி அன்று தேர். அங்கு மகா சிவராத்திரி நாளில் காலை சூரியபூசை நிகழ்வதாகத் தெரிகிறது. இதுவரை தெரிந்த கோயில்கள் யாவும் சிவன் கோயில்களாகவே இருக் கின்றன. தஞ்சை மாவட்டம் பரிதி நியமம், அவன் பெயரால் அமைந்தது. சில கோயில்களை அவன் வழிபட்டதாகப் புராண வரலாறு. அவைகளில் பல இந்த சூரியபூசை நிகழும் கோயில் களாக இருக்கின்றன.

காலைக் கடன்

திரு. G. விநாயகம் அவர்கள்,
பொருளாதார விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பிறவி எடுத்த ஒவ்வொருவருக்கும் பலவகையான கடன் உள்ளது. கடன் பட்டுள்ளோம் என்ற சொல்லுக்கு கடமைப் பட்டுள்ளோம் என்றும், பிறரிடத்துப் பொருள் பெற்றதனால் கடன் பட்டுள்ளோம் என்றும் உலக வழக்கில் உபயோகப்படுத்துகிறோம். காலைக்கடன் என்பதற்கு நாம் சாதாரணமாக காலை எழுந்தவுடன் உடல் தூய்மை செய்து கொள்வதை குறிப்பிடுவது வழக்கம். உடல் தூய்மை செய்து கொள்வதைக் கடன் என்று குறிப்பிடுவது இல்லை. ஏனெனில், கடன் என்றால் நாம் ஒருவரிடம் பொருள் வாங்கியுள்ளோம் அதைத் திருப்பி கொடுக்கும் வரை நாம் அவருக்குக் கடனாளியாகிறோம். உடலைத் தூய்மை செய்து கொள்வதில் நாம் எந்த வகையிலும் கடனாளி என்று சொல்வது பொருத்தமில்லை. கடன் என்ற சொல்லுக்கு கடமை என்று பொருள் கொள்ளினும் ஒருவர் நமக்கு செய்த ஏதோ ஒரு செயலுக்காக நாம் அவருக்குச் செய்ய கடமைப்பட்டுள்ளோம் என்று பொருள் கொள்கிறோம். ஆகவே கடன் என்பதற்கு, கடமை என்று கொள்ளினும் உடலைத் தூய்மை செய்து கொள்வதில் நாம் எவ்வகையிலும் கடமைப்பட்டதாகத் தோன்றவில்லை.

காலைக்கடன் என்பதற்கு மிகவும பொருத்தமான மற்றொரு பொருள் உள்ளது. காலைக்கடன என்றால் காலையில் பிறப்பு எடுத்த ஒவ்வொருவரும் இவ்வுடலைக் கொடுத்த இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடனைக் குறிக்கின்றது. இவ்வுடலையும், இவ்வுடலிலுள்ள உறுப்புக்களையும் அளித்து அனுப்பிய இறைவனுக்கு நாம் கடன் பட்டுள்ளோம்.

உலகில் தோற்றம் எடுத்தது முதல் நாம் இறைவனுக்குக் கடமைப்பட்டுள்ளோம் அல்லது கடன்பட்டுள்ளோம். கடன் பட்டவன் எவ்வாறு சிறிது சிறிதாக கொடுத்து அக்கடனி லிருந்து விடுவித்துக் கொள்கிருனே அவ்வாறு நாம் தினமும் காலையில் எழுந்தவுடன் அவனை வணங்கி நாம் அவனுக்குப் பட்டுள்ள கடனைச் சிறிது சிறிதாகத் தீர்த்துவிடல் வேண்டும். அவ்வாறு நாம் அவனை என்றும் வணங்குவோமேயாளுல் இறைவன் நம் பிறப்பை அறுக்கிருன். கடமை என்று பொருள் கொண்டாலும் அவ்வாறே நாம் அவனை வணங்கி, நம்முடைய கடமையைச் செலுத்தி கடமைப் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்கிரோம்.

காலைக்கடன் என்பதற்கு காலையில் இறைவனை வணங்கி அவன் புகழ் பாடுதல் என்று கூறுமுகத்தான் திருநாவுக்கரசு சுவாமிகள் கீழ்வரும் பாடலைக் குறிப்பிடுகின்ருர்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே."

இப்பாடலின் மூலம் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் விடியுமுன் எழுந்து உடல் தூய்மை செய்து கொண்டு சிவபெரு மானுடைய புகழைப்பாடி அலற வேண்டும் என்று குறிப்பிடு கின்ருர். ஆகவே ஒவ்வொரு நாளும் நம்முடைய முதல் கடமை இறைவனைப் பாடித் துதித்தல் அன்றி வேறில்லை. நம்முடைய மற்றைய கடமைகள் எல்லாம் பின்வருவனவே. இதே கருத்தை அப்பர் சுவாமிகள் பல இடங்களில் குறிப்பிடுகின்ருர். திருச் சோற்றுத்துறை பதிகத்தில்,

"காலை யெழுந்து கடிமலர் தூயன தாங்கொணர்ந்து"

என்று கூறி தூய மலரால் சிவபெருமானை அர்ச்சனை செய்தலின் அவசியத்தைக் குறிப்பிடுகின்ருர்.

திரு அன்னியூர் தேவாரத்தில்.

"காலை போய்ப் பலி தேர்வர்கண் ணேர்நெற்றி
மேலை வானவர் வந்து விரும்பிய
சோலை சூழ்புறங் காடரங் காகவே
ஆலின் கீழறத் தார் அன்னியூரரே."

என்று பகர்ந்து காலையில் நாம் செய்யவேண்டிய முதல் கடமையை வலியுறுத்துகின்றார்.

தினமும் பலவகையான செயல்களில் ஈடுபடும் நாம் முதன் முதலில் இறைவனை வழிபட்டுப் பிறகு காரியங்களை தொடங்குவோமேயானால் செயல்களும் பயனுள்ள வகையில் முடியும். திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களும், நாம் அதிகாலையில் இறைவன் வழிபாட்டில் ஈடுபடவேண்டிய அவசியத்தைக் குறிப்பிடுகின்றன. ஆகவே, காலைக்கடன் என்பது காலையில் நாம் இறைவனுக்குச் செலுத்தவேண்டிய வழிபாட்டுக் கடனையே கூறுவது ஆகும்.

★ அன்பருக்கு அன்பன் ★

அன்பருக்(கு) அன்பன் முருகனய்யா
ஆதரவு தருபவன் குமரனய்யா
நன்மைக்கு நன்மை செய்திடுவான்
நாடிச் சென்றால் உதவிடுவான். (அன்பருக்கு)

மலையின் மீதும் நின்றிடுவான்
மயிலின் மீதும் அமர்ந்திடுவான்
கலைகள் யாவும் தந்திடுவான்
கற்றவர் தமக்கும் இனித்திடுவான். (அன்பருக்கு)

எங்கும் நிறைந்த இறைவனுக்கும்
மறையின் பொருளைச் சொன்னவனும்
சங்கத் தலைவன் நக்கீரன்
சரும நோயைத் தீர்த்தவனும். (அன்பருக்கு)

குமர குருபரக் கடவுள்
குறைகள் எல்லாம் தீர்த்திடுவான்
அமரர் துன்பம் துடைத்தவன்
அவன்தாள் பணிந்து போற்றுவோம். (அன்பருக்கு)

— செல்வன்,

THE LIGHT ON THE PATH OF THE SOUL IN SAIVA SIDDHANTA

Dr. Ratna Navaratnam

The Sakti of Siva is the mediating light and hence an interpretation of this grand conception is a pre-requisite to the penetrative understanding of Saiva Siddhanta.

In the first place the soul must know herself and then understand her relation to God on one hand and the world of matter on the other and it is only then that she will realise her destiny —அரன் கழல் செலுமே.* This is to attain the beatitude of His Feet. Saints like Saint Gnanasambandhar, Saint Manickavacagar and the galaxy of Saiva Nayanmars have described in their moving paeans of praise on Lord Siva the stages of the progress of the soul, the purificatory processes and the manner of liberation of the soul from the eternal three-fold mala.

Saint Manickavacagar in many a lyric in **Tiruvacagam** has referred to the purification of the soul with regard to **knowledge**, **activity** and **desire** and the work of enlightenment effected by the grace of Siva.

"சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த வித்தகத் தேவர்க்கே"............
"சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்"....................
"ஊனும் உயிராய் உணர்வா யென்னுட்கலந்து...வழியெமக்குத்
தந்தருளும்"

---

* SIVAGNANA BODHAM, Sutra 8. This sutra deals with the grace of God given for the Soul's enlightenment.

The above article is reproduced with the kind permission of the Editor of 'Saiva Siddhanta'.

In the kevala avasta, in the dark night of the soul, man finds himself entirely under the dominance of the three-fold mala. In the sakala avasta, in the intermediate stage of awakening, the soul is partly under the influence of the three-fold mala and partly under that of Siva. In the suddha avasta, she is entirely under the potency of Siva. This gnana stage is also termed the goodly path or "Sanmarga". In this stage, as we enjoy in those stately odes in Thiruchathakam, St. Manickavacagar deals with the emergent activity of veiling மறைத்தல், and the work of enlightenment of Siva—the work of Tirodana sakti and of Arul sakti. cf. "தாயுற்று வந்தென்னை யாண்டு கொண்டதன் கருணை"

The purification of the soul is an essential requisite to achieve true knowledge, which in turn is indispensable for beatitude. The faculty of sight must be imbued with insight so that the soul can see with the aid of Sakti, the object of liberation." cf.

"காட்டாதன வெல்லாங் காட்டி சிவங்காட்டித்....தன் கருணைத்
தேன் காட்டி, நாட்டார் நகை செய்ய நாம் மேலை வீடெய்த..."

-- Tiruvacagam

It is evident that Saiva Siddhanta uses the term "Arul" in the sense of enlightenment and not in the sense of mercy or the Christian idea of grace. "Arulal" means that Siva enlightens the soul out of grace by imparting true knowledge.

The mere existence of the eye does not guarantee the power of "seeing". An object is required as well as a directing of the eye to the object. Similarly the fact that the soul is endowed with the eye of sakti does not guarantee true knowledge. The soul must make use of this eye—the inherent sakti—that is no

longer hindered by the three-fold mala. In order to enjoy the highest beatitude, 'நாம் மேலை வீடெய்த'—the soul must become aware of the true situation and be able to cognise through the sakti eye and find the highest bliss within herself. cf.

"ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை";
"வள்ளல் வர வர வந்தொழிந்தான் என் மனத்தே".

-- Tiruvacagam

Hitherto Siva in Sakti was unrevealed, but with the coming of the God-Guru, Sakti was seen and cognised by the soul as the object of cognition. Although Siva is Sat-Chit, ie., pure consciousness and intelligence that is inseparably in advaita connection with the soul, He is not cognised by the soul which is under the influence of "Asat", and is embedded in ignorance and impurity. cf.

"வள்ளற் றலைவனை வான நன் னுடலை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொ லோவென்று
வுள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தானுமே."

திருமந்திரம்—2994.

The God-Guru of St. Manickavacagar is Siva who dwells in the souls in eternity. Though invisible and unknown to them, He confronts the soul as an outside entity, without ceasing at the same time to be the "inner eye". Thus when a soul is fit for higher knowledge, the guru appears and leads the matured soul to liberation. Tirumular has many a gem where he speaks of the appearance of Siva as Satguru. cf.

'குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்குங்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே'.

திருமந்திரம்—1581.

In the Saiva sastras occur many instances where a jivanmukta becomes a satguru on the strength of the special "willing" of Siva which occurs whenever a soul is fit to receive the highest instruction. Here the activity of the guru is not an activity of the jivan mukta caused by Siva, but an activity of the Lord himself. The role of the satguru is a dominant feature in Saiva Siddhanta. The soul that is rooted in mala can be turned to Siva after the descent of grace, Saktinipatha, has opened the possibility of the exclusive connection with the Lord. This can happen only if the soul has paved the way to "iruvinai oppu"-when the good and evil become balanced-and to malaparipaha, the gradual elimination of the bonds, and it is fully enlightend about the true nature of mala and of the bliss of beatitude.

By following the path of chariya, kriya and yoga, the soul has obtained a prescience of truth, மெய்யுணர்தல், but not yet in possession of true knowledge. The yearning for the highest good, pulsates in every fibre of a true seeker of wisdom. In order to strengthen the aversion of the soul to the three-fold mala and fulfil its yearning for the highest beatitude, Siva equips the soul with His sakti through Saktinipatha. Even so, the soul does not yet understand how to use this expedient for the attainment of the highest bliss.

The Lord is within, but His presence cannot be recognised by the soul and therefore Siva must reveal himself to the souls in a manner by which they can cognise Him. He effects this by His encounter in the form of satguru. His work in the visible form of a guru is in consonance with his nature which is invisible, in so far as He is not recognised as Siva by the

souls who are not mature enough to see Him thus, except as a man among men. To the illumined souls as Vijnanakalar, He appears in His unveiled glory; to the Pralayakalar who still feel the impact of the mala, He appears as God, whereas to the Sakalar who are steeped in ignorance, He appears as a man. Cf.

> "சித்த சிவன் குரு வாய்வந்து தூய்மைசெய்
> தத்தனை நல்கருள் காணு வதிமூடர்
> பொய்த்தகு கண்ணு னமரென்பர் புண்ணிய
> ரத்த னிவனென் றடிபணி வாரே." திருமந்திரம்—1578.

Thus we see that those souls who have not attained the inner poise of equanimity and purity, cannot see Siva, nor their intelligence comprehend Him.

They have eyes, but they do not see: they have ears, but do not hear. The God-Guru is only another ordinary man for them.

The direct confrontation of the Satguru becomes imperative, because only He who dwells in eternity in the souls will gauge their spiritual situation, and their needs. Thus books and other indirect sources of instruction are ruled out as ineffective aids in the spiritual path of liberation. The soul must gain insight. Insight is present in the soul in a dormant way and this is not effective to remove the potency of the malas and gain liberation. The soul must identify herself with this insight—with Siva, the pure perfect insight, the luminous eye who abides within the soul.

The end of liberation is to attain the perfect beatitude which is beyond matter, beyond the understanding of the soul (Pasa Jnana and Pasu Jnana) and so no man can give any instruction about it or

guide the soul to it. Only Siva can do it and thus illumination or insight by the Lord is a condition for the attainment of beatitude. The guru alone can unfold the "Sat" by equipping the soul with the perfect insight which the material means of cognition with which the soul equipped by "asat" (maya) cannot reach. St. Manickavacagar sings the lyric of bliss, ஆனந்தாதீதம், through the flawless organ of cognition, mediated by his God-Guru. Cf.

> "உருகி நான்உனைப் பருகவைத்தவா
> ஞான நாடகம் ஆடுவித்தவா?
> நைய வையகத் துடைய விச்சையே." -- Tiruvacagam

Tiruvacagam is a poem of experience. The Saintly poet speaks of a direct encounter with the guru whose impact made him aware of the relation of the realities (Pathi, pasam) to the soul. If the soul knows the **relation** of the eternal verities of pathi and pasam, God and bondage to pasu (soul) then she knows **her own history, her destiny and her goal**. When the soul knows her history, "Who am I", she realises the possibility of progress and the improvement of her own state. The guru introduces the fit pupil into the history of his soul, by enlightening about the law of karma, its purport, the anatomy of desire and desirelessness, and the avenue of true knowledge.

This relation of the soul to Siva can only be understood clearly, if the idea of the sakti of Siva is understood fully. The relation of the sakti of Siva to that of the soul is brought out in the Saiva sastras by the analogy of the soul to the body, The body for all purposes is dependent upon the soul. The soul must animate the body and must give a man the mechanical power to act. Besides, she also represents the autho-

ritative principle. The well-being of the body in general is only possible if it yields fully to the guidance and authority of the soul.

In the same way, the soul cannot act without the sakti of Siva. Sakti is the mechanical power that sets the faculties of the soul moving and is the substratum of all her activities. Besides sakti is not merely a mechanical power station, but she is also the guiding authority of the soul. Srkti's dominant role is to give **the** soul the physical possibility of her activity and **also** to influence the quality of that activity. Sakti is present in the souls from the beginning. Cf.

"நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ." --Tiruvacagam

The soul under the influence of the three-fold mala had been utilising sakti only as mechanical power, and even so, had assumed that power to be her own. The soul had asserted herself as the leader of action, whereas in reality, it is her anava mala which had directed her actions and conditioned their quality. The supreme function of the guru at this juncture is to enlighten the deluded soul to recognise the sovereignty of the sakti and in stages guide the soul to act in harmony with sakti. Cf.

"சித்தம் சிவம் ஆக்கிச் செய்தனவே தவம் ஆக்கும்
அத்தன் கருணையினல் தோள் நோக்கம் ஆடாமோ."
--Tiruvacagam

The process of enlightenment by the guru enables the soul to submit herself to the guidance of sakti whose sustaining influence can alone guarantee her

aversion to the "I-mine" deluding forces. Sakti cannot begin to influence the soul as long as it is subject to the operative power of the malas. When the veil is removed, then sakti can unfold pure insight in the soul. Such is the significant initiation of the God-Guru. Cf.

"ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த இன்பமே என்னுடை அன்பே.

--Tiruvacagam

The eye can perceive the object, only if there is light which builds a kind of a bridge between the eye and object. Similarly the soul requires a mediating light in order to recognise what is necessary for the attainment of beatitude—the bliss of anandam, born of immaculate love.

★ திருவிசைப்பா ★

திருப்பல்லாண்டு

[ஒன்பதாம் திருமுறை]

★ தெளிவுரை ★

புதிய பதிப்பு.

(குரோதி ஆண்டு மார்கழித் திருவாதிரை வெளியீடு)

376 பக்கம் வெள்ளைத் தாள். தனிப் பிரதி அடக்க விலை ரூ.1–50,
ஒரேசமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் வாங்குவோருக்கு 20% கழிவு.
(தபால் செலவு வேறு)

கிடைக்குமிடங்கள் :–

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம். (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராச விலாசம்"
53, பிள்ளையார் கோயில் தெரு; திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

அன்னைப் பத்து

அன்னைப் பத்தாவன :- முற்பதிக அநுபூதிப்படித் திருவருளாய் நின்று ஆடாமல் ஆடிநின்ற முறைமையில் உண்டாகிய சிவானந்தத்தைச் சொல்லப் புலப்படாததாதலால், அருளுக்கருளாய் அபேத உருவாய் அத்துவித சித்தாந்த அடிமைத்திறவுண்மைப் பொருளாய் உள்ளதனை ஒருவர்க் கொருவர் அளவளாவி வினு விடையான சிவானந்தப்பெருக்கைத்தாயும் பெண்ணுமாகிய இருவரவர்க்கும் ஒரு மொழியான அநுபவமெனக் காண்க.

திருப்பாக் கலி விருத்தமாகத் திருத்தில்லையிலோதியதெனக் காண்க.

இனி, பரநாதமே குடமுழ வாத்தியப் பறையென்ற (தி—ன).

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனார் அன்னே என்னும்.

(இ-ள்). வேத...........யென்னும் :—

எமதுயிரான ஞானத்தாயே ! கேள் ! நமது பரமசிவன் திருவாக்கே வேதம்; வெண்ணீறணிந்திருப்பதான சிவந்ததே திருமேனி; குடிலையினின்ற நாதமே முழக்கொலியடி; தாயே.

நாதப்...........என்னும் :—

இன்னமுங் கேளடி ! என்னுயிரன்னையே ! முன் அருளிய நாதமே பிரத்தியாங்க உபாங்க மானதும், திருமாலுக்கும் அயனுக்கும் எப்பொருட்கும் இராசன் நின் நாதனடி ! தாயே ! எனவருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

The Raja of Ramnad Memorial Feeding Charity

In the Month of Ani at Varanasi - Capital Rs. 5000/-

This endowment is founded by His Holiness **Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal,** Head of Sri Kasimutt, Tirupanandal in memory of the Raja of Ramnad and the capital of this endowment is Rs 5000/- being a part of Tasdic Allowance and Additional Compensation amount of Rs 11, 210-30 received for Fasli 1376 from the Government of Madras as per proceedings of the Revenue Divisional officer, Devakottai, No. Roc. A. 5. 16471/66 dated 12-7-1966 (G. O. No.MS. 231 dated 17-1-62) under section 38 (1) and 38 (2) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948 in respect of Talirmarungur village in Tiruvadanai Taluk of Ramnad Dt. and the interest from the endowed capital will be utilised for conducting feeding charity (Brahmin feeding and Maheswara Pooja) in our Kumaraswami Mutt, Kedar Ghat, Banaras City in the Tamil month of Ani (ஆனி) in addition to the other feeding charities conducted according to the other endowments already made. This endowment shall be called "THE RAJA OF RAMNAD MEMORIAL FEEDING CHARITY AT VARANASI IN THE MONTH OF ANI".

2. The capital of the endowment consists of Rs 5000/- invested in Government Securities-10 Years Defence deposit certificate fetching interest at 4½% bearing no. MS. 004735. The administration of the fund shall vest in us and our successors in interest.

3. The annual interest accruing on the capital after deducting Head office expenditure etc, shall be utilised for conducting feeding charity (Brahmin feeding and Maheswara Pooja) in our Kumara Swami Mutt, Kedar Ghat, Banaras in the month of Ani (ஆனி) in addition to the other feeding charities conducted according to the other endowments made by us.

4. The feeding shall be conducted according to the Thitta Japtha [Budget) prepared by us and our successors in interest each year which will depend upon the amount of interest received and the prices of commodities.

5. The endowment shall not be diverted to any other purpose than the one stated above. The capital shall be invested in highest interest yielding securities or Fixed Deposits as and when necessary. The capital shall always stand in our name and our successors in interest.

Tirupanandal }
Dated 16-9-1966 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

The Raja of Ramnad Momorial Feeding Charity in the Month of Ani at Varanasi -Capital Rs. 5000.

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on 19-9-66 as No. 50 of 1966 of Book 4 volume 53, pages 205 to 207.